(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 109.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 ஒக்தோபர் 25, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

456/ ’16

1.

கௌரவ எம்.எச்.எம் சல்மான்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹிங்குரக்கொட பிரதேச சபையினால், குப்பை கூளங்களை அப்புறப்படுத்தும் இடமாக இனங்காணப்பட்டுள்ள ரொட்டவெவ, பொல்வத்த காணி அசுத்தமடைந்து அதன் நீர் மூலங்களுக்கு சேதமேற்படக்கூடிய ஆபத்தான நிலைமை நிலவுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) குடிநீர் பிரச்சினையும் சிறுநீரக நோய் நிலைமையும் தீவிரமடைந்துள்ள மேற்படி பிரதேச மக்களுக்கு இதன் மூலம் ஏற்படுகின்ற தாக்கத்தை குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) சுற்றுச்சூழலுக்கு பாதிப்பேற்படாத வகையில் முறைசார்ந்ததாக கழிவகற்றல் திட்டமொன்றை ஆரம்பிப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

464/ ’ 16

2.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 3 )

(அ) (i) 2016 சனவரி 01 திகதியில் உள்ளவாறு சனாதிபதியினால் அவரது பணியாட் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள சகல ஆலோசகர்கள், செயலாளர்கள், ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள், பிரத்தியேக உதவியாளர்கள் மற்றும் வேறு இவ்வாறான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி (i) இற்கு அமைவாக மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகள், பணியாட்டொகுதி மற்றும் ஏனைய வசதிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

517/ ’16

3.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கருக்கலைப்பு சட்டத்தால் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இலங்கையில் சட்டவிரோத கருக்கலைப்பு இடம்பெறுகின்றதென்பதையும்;

(iii) இத்தகைய கருக்கலைப்புகள் மேற்கொள்ளப்படும் இடங்கள் பாதுகாப்பற்ற முறையிலும் சட்டவிரோதமான விதத்திலும் செயற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012.01.01 ஆம் திகதி முதல் 2015.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் இனங்காணப்பட்டு, சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத கருக்கலைப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையங்களுக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவைக்கேற்ப மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) அச்சட்டங்கள் போதியதாயில்லை என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அச்சட்டங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(v) கருக்கலைப்பை சட்டபூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

609/ ’16

4.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (2)

(அ) (i) 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இலங்கை போக்குவரத்துச் சபையினால் பேருந்து உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்கையில் கடைப்பிடிக்கப்பட்ட முறையியல் ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது;

(ii) அது, அதற்கு முன்னர் நிலவிய முறையியலைப் பார்க்கிலும் எவ்விதத்தில் மாறுபடுகின்றது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஆண்டுகளில் இ.போ.ச. வுக்கு உதிரிப்பாகங்கள்,

(i) வழங்குவதற்காக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்த கம்பனிகள் மற்றும் அவற்றின் முகவரிகள்;

(ii) வழங்கிய கம்பனி மற்றும் அதன் முகவரி;

(iii) வழங்கிய திகதிகள் மற்றும் அவற்றின் பெறுமதிகள்;

(iv) இது தொடர்பில் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட இறக்குமதி வரித்தொகைகள்;

தனித்தனியாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தருவிக்கப்பட்ட உதிரிப்பாகங்களின் விலைகள், தரம் மற்றும் தேவைப்பாடு சம்பந்தமாக இ.போ.ச. திருப்தி அடைகின்றதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

748/ '16

5\.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் காலி மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

868/ '16

6\.

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை பதுளை மாவட்டத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஊழியர்களில் பெரும்பாலானவர்களுக்கு அவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஊழியர் சேமலாப நிதி மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் இன்னும் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) இதன் காரணமாக அந்தக் குடும்பங்கள் பெரும் அழுத்தத்துக்கு உள்ளாகியிருப்பதனால் அந்த ஊழியர்களுக்குரிய கொடுப்பனவுகளை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

881/ '16

7\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இராணுவத்தில் சேவையாற்றுகின்ற படை வீரர்களின் பெற்றோர்களுக்கு ரூபா 750/- கொடுப்பனவொன்று வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுப்பனவு தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

(iv) எதிர்வரும் காலத்தில் மேற்படி கொடுப்பனவை இவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

518/ '16

8\.

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பெண் பாலியல் தொழிலாளர்கள் பற்றிய தொகை மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் HIV தொற்றுடன் வாழ்ந்த மற்றும் வேறு சமூக நோய்களுக்கு ஆளாகியிருந்த பெண் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) HIV உள்ளிட்ட சமூக நோய்கள் பெண் பாலியல் தொழிலாளர்களுக்கு மத்தியில் பரவுவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

749/ '16

9\.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் காலி மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

869/ ’16

10.

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவிக்கு நியமனம் பெற்றதன் பின்னர் மாகாண சுகாதார சேவையின் முன்னேற்றம் ஓரளவு மெதுவாக இடம்பெறுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், ஊவா மாகாணம், குறிப்பாக பதுளை மாவட்டத்தில் ஊவா மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் கிராமிய மருந்துச்சாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

882/ ’16

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும்போது, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் சில ஊழியர்களுக்கு 02 அங்கத்துவ இலக்கங்கள் வழங்கப்படுவது எவ்வாறான சந்தர்ப்பங்களில் என்பதையும்;

(ii) மேலே (i) இற்கு அமைய வழங்கப்பட்டுள்ள அங்கத்துவ இலக்கங்களை, அலுவலரை ஓய்வுபெறச்செய்யும் சந்தர்ப்பம் வரை ஒன்றிணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) சபையினால் மேற்கொள்ளப்பட்ட தவறை திருத்துமாறு அலுவலர் ஒருவர் கோரியுள்ள போதிலும், அவர் ஓய்வுபெறும் சந்தர்ப்பம் வரை குறித்த தவறு திருப்படாததன் மூலம் அவரின் சேமலாப நிதியக் கொடுப்பனவு தாமதமாகின்றது என்பதையும், இது சபையின் கவனயீனமாகும் என்பதையும் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

519/ ’16

12.

கௌரவ புத்திக பத்திறண,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்ட ஆட்கள் குற்றவியல் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக பால் மாற்றத்தை செய்துகொள்கின்றார்கள் என்பதையும்;

(ii) அதன் பின்னர் கூட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபடக்கூடிய ஆபத்தான நிலையொன்று உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பால் மாற்றம் செய்துகொண்டவர்கள் இலங்கையினுள் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டுள்ளதாக அறியவந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வாறானவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குற்றச்செயல்களை புரிந்த பின்னர் பால் மாற்றம் செய்துகொண்டவர்கள் சம்பந்தமாக அறியவந்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இவ்வாறானவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

750/ '16

13.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

870/ '16

14.

கௌரவ சமிந்த விஜேசிறி,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுதேச மருத்துவம் தொடர்பாக இன்றளவில் சர்வதேச ரீதியாக விசேடமான ஆர்வம் ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) பதுளை மாவட்டத்தில் உள்ள சுதேச மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி பட்டதாரிகளை மாகாண சபையின் மற்றும் மத்திய அரசாங்கத்தின் சேவைக்கென ஆட்சேர்ப்புச் செய்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் தொடர்பான தகவல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்),— 2014 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி ( இல.1 ) ,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சரவணபவன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ செஹான் சேமசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி ( இல.2 ) ,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மஹிபால ஹேரத் ஜனசஹன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

4.

கௌரவ மலித் ஜயதிலக,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி ( இல.3 ) ,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"மைத்திரிபால சிறிசேன லக்தரு திரிய மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 187/'16

1.

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ லக்கி ஜயவர்தன

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ சந்திம கமகே

கௌரவ முஹமட் நவவி

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ துலிப் விஜேசேக்கர,— நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழு,— ஐக்கியநாடுகள் பொதுச்சபை அதன் A/RES/70/1 தீர்மானமானது இலட்சியமான பதினேழு நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தி இலக்குடன், (SDGs) நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான நிகழச்சிநிரல் 2030 ஆரம்பித்துள்ளதாதலாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கமும் இத் தீர்மானத்தை அங்கீகரித்ததுடன், இந் நிகழ்ச்சிநிரலை அமுல்படுத்துவதற்காக சலிப்பின்றி பணியாற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளதாலும்;

நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகள் நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தியின் பொருளாதார, சமூக, சுற்றாடல் பரிமாணங்களை ஒன்றாக இணைத்து ஒன்றுக்கொன்று இணைந்த கட்டமைப்பொன்றை உருவாக்குவதனாலும்;

பாராளுமன்றங்களானவை அவற்றின் சட்டமாக்கல், வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகள் ஊடாக இந்த இலக்குகளை யதார்த்தமாக்குவதில் முன்னிலையானவையாக உள்ளதாலும்;

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் 2030 நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான நிகழ்ச்சிநிரலை யதார்த்தமாக்குவதை உறுதிப்படுத்தும் முகமாக, பின்வருன தொடர்பாக விடயங்களைக் கவனிப்பதற்கும் சிபாரிசுகளைச் செய்வதற்கும் பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) உரிய நிரல் அமைச்சுக்களுடன் கலந்தாலோசித்து தேசிய கொள்கைகளை வகுத்தலும் மற்றும் சட்டங்களை ஆக்குதலும்;

(ஆ) போதிய உள்நாட்டு வளங்களை ஒதுக்குதலும், சர்வதேச நிதி வளங்களைக் கண்டறிதலும்;

(இ) அரசாங்க அமுல்படுத்தும் முகவராலயங்களுக்கிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்;

(ஈ) தேசிய, அரசாங்க, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் வலையமைப்பினை ஏற்படுத்தல்;

(உ) அரச - தனியார் பங்காண்மையை ஊக்குவித்தல்;

(ஊ) ஐக்கிய நாடுகள் முகவரகங்களின் மற்றும் சிவில் சமூக நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளல்;

(எ) பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் நாடுகளிடையே நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ளல்;

(ஏ) பிரத்தியேக தரவுத்தளத்தை விருத்தி செய்வதுடன் காலத்திற்கு காலம் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்;

(ஐ) மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய அல்லது நேர்விளைவான எல்லா விடயங்களையும் பரிசீலித்தல்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது பதினைந்திற்கும் (15) இற்கும் மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடபெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேலே சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாகப் பரிசீலனை செய்வதற்கு அவசியமென குழு கருதுகின்றவாறாக எவரேனும் ஆளை அதன் முன் தோன்றுமாறு அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை அதன் முன் கொண்டுவருமாறு எவரேனும் ஆளை வேண்டுவதற்கும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மூலமான எல்லாச் சான்றுகளையும் பெறுவதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் விசேடத்துவம் பெற்றவர்கள் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதேனும் ஒத்திவைப்பினால் தடைப்படாது காலத்திற்குக் காலம் அமர்வுகளை நடத்தி இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அமர்வுகளை நடத்துவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4 குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது ஒரு பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

* 2.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ( திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிய 1971/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) ஆம் உப பிரிவின் (ஔ), (க) மற்றும் ( த) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 12.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 12 ஆம் திகதிய 1892/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஏ) பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள், கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 03 ஆம் திகதிய 1904/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (த எ), (த ஏ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 16.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஔ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 17.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூலை 20 ஆம் திகதிய 1924/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8) , — 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9) , — 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10) , — 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல. 11 ) , — 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 23.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

24.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.